செ.வெ.எண்: நாள்:14.06.2020

**கரூர் மாவட்டம், கரூர் மற்றும் க.பரமத்தி ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் புதிய காவிரி கூட்டுக் குடிநீர் திட்டபணி மற்றும் புதிய வட்டாச்சியர் அலுவலகம், பள்ளி கூடுதல் வகுப்பறைகள் அமைக்க ரூ.1199.50 இலட்சம் மதிப்பில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் பூமிபூஜையிட்டு பணிகளை தொடங்கி வைத்தார்கள்.**

**அதன் விபரம் வருமாறு:**

கரூர் மாவட்டம் கரூர் ஊராட்சி ஒன்றியம் வாங்கல் ஊராட்சி ஒத்தரசு காவிரிக்கரையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காதப்பாறை ஊராட்சிக்கு புதிய காவிரி கூட்டுக் குடிநீர்திட்ட பணி, புன்செய்புகளூர் வட்டாச்சியர் அலுவலகம், க.பரமத்தி ஊராட்சிஒன்றிய அரசு மேல்நிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் அமைக்க ரூ.1199.50 இலட்சம் மதிப்பில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் தலைமையில் இன்று (14.06.2020) பூமிபூஜையிட்டு பணிகளை தொடங்கிவைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது

மாண்புமிகு மறைந்த தமிழக முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சொன்ன இங்கு எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும் இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்ற தாரக மந்திரத்தில் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஆகியோரின் உத்தரவிற்கிணங்க கரூர் மாவட்டத்தில் பொதுமக்களின் அத்தியாவசிய தோவைகளை அறிந்து அது தொடர்பான பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நமது மாவட்டத்திலிருந்து பல்வேறு மாவட்டத்திற்கு குடிநீர் செல்கிறது ஆனால் காவிரி ஆறு செல்லும் நமது மாவட்ட மக்கள் குடிநீர் பற்றாக்குறையால் சிரமப்படுவதால் நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளுக்கு இணையாக ஊராட்சி ஒன்றியங்களுக்கும் குடிநீர் திட்டப்பணிகள் செயல் படுத்தவேண்டும் என்ற நோக்கத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று நிதிபெற்று காதப்பாறை ஊராட்சி பகுதிக்கு காவிரி ஆற்றிலிருந்து 11.60 கிலோமீட்டர் நீளத்தில் பைப்லைன்கள் அமைத்து மூன்று இடங்களில் தலா 3 இலட்சம் கொள்ளளவு கொண்ட நீர் தேக்க தொட்டிகள் அமைத்து அதன் மூலம் 9,574 மக்கள் தொகை கொண்ட 17 குடியிருப்பு பகுதிகளுக்கு வீடுவரை தண்ணீர்கொண்டு சேர்க்க புதிய கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் ரூ.790 இலட்சம் மதிப்பில் பணிகள் நடைபெற உள்ளது. அதில் ஒருபகுதியாக இன்று (14.06.2020) ரூ.48 இலட்சம் மதிப்பில் முதல்கட்ட பணிகள் தொடங்கிவைகப்பட்டுள்ளது. இதன் மூலம் காதப்பாறை ஊராட்சி பகுதிக்கு நிரந்தரமாக தண்ணீர் பிரச்சனை தீர்க்கப்படும்.

அதே போல் நீண்டநாள் பொதுமக்களின் கோரிக்கையாக இருந்த புகளூர் தனி வட்டமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கப்பட்டதையொட்டி வட்டாச்சியர் அலுவலகம் வாடகை கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. அதற்காக வேளாயுதம்பாளையத்தில் புதிய கட்டடம் ரூ.305 இலட்சம் மதிப்பில் 1.35 ஏக்கர் அளவுள்ள இடத்தில் வட்டாச்சியர் குடியிருப்புடன் கூடிய இரண்டு தளங்கள் கொண்ட அலுவலகம் கட்டுவதற்கு இன்று பணிகள் தொடங்கிவைக்கப்பட்டுள்ளது.

பின்னர் க.பரமத்தியில் உள்ள பவர்கிரிட் நிறுவனத்தின் சார்பாக சமுதாய பங்களிப்பு நிதியில் ரூ.104.50 இலட்சம் மதிப்பில் க.பரமத்தி ஊராட்சிஒன்றியம் அரசு மேல்நிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் கலையரங்கம் கட்டுவதற்கும் என மொத்தம் ரூ.1199.50 இலட்சம் மதிப்பில் புதிய பணிகளுக்கு பூமிபூஜையிட்டு தொடங்கிவைக்கப்பட்டது.

என மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள், தெரிவித்தார்

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சி.இராஜேந்திரன், மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை கூடுதல் இயக்குநர் திருமதி.எஸ்.கவிதா, திருச்சிராப்பள்ளி மத்திய கூட்டுரவு வங்கித்தலைவர் திரு.ஏ.ஆர்.காளியப்பன், கரூர் வருவாய் கோட்டாச்சியர் திருமதி.வ.சந்தியா, பொதுப்பணித்தறை செயற்பொறியாளர்(கட்டிடம்) திரு.சச்சிதானந்தம், பவர்கிரிட்நிறுன தலைமை பொது மேலாளர் திரு.சுரேந்திரன், முதுநிலை பொது மேலாளர் திரு.கிருஷ்ணகுமார், நகரகூட்டுறவு வங்கித்தலைவர் திரு.திருவிகா, மாவட்ட ஊராட்சித்துணைத்தலைவர் திரு.ந.முத்துக்குமார், ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர்கள் திரு.பாலமுருகன்(கரூர்), திரு.மார்கண்டேயன்(க.பரமத்தி) வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி விஜயலெட்சுமி, திரு.பரமேஸ்வரன்(கரூர்), திரு.பழனிகுமார்(க.பரமத்தி) வட்டாச்சியர்கள் திரு.செந்தில்(மண்மங்கலம்), திரு.சிவக்குமார்(புகளூர்), உதவிப்பெறியாளர் திரு.மணிவாசகம், காதப்பாறை ஊராட்சித்தலைவர் திருமதி கிருபாவதி, முன்னால் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.காமராஜ், திரு.சிவசுப்பிரமனியன், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் திரு.கமலக்கண்ணன், திரு.கிருஷ்ணன், திருமதி ரேணுகா, திருமதி மல்லிகா உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**